தமிழர் பேரவை
[ESTB 1951]

பேரவை Peravai

M.I.T.A. (P) NO. 382/10/2001 தமிழுக்கும் தமிழருக்கும் வளம் சேர்ப்போம். மே 2001

விஷு தமிழ்ப் புத்தாண்டு பிறந்தது
இரு பெரும் திட்டங்கள் மலர்ந்தன.

$9000 கல்வி உதவி நிதி



"பிள்ளைகள் கல்வியில் சிறந்து விளங்குவதைப் பெற்றோர் உறுதி செய்ய வேண்டும்"
- டாக்டர் ஆர் தேவேந்திரன்

முதன்முறையாக, தமிழர் பேரவை, 55 இந்திய மாணவர்களுக்குக் கல்வி உதவி நிதியாக $9000 வழங்கியுள்ளது. கடந்த 18.4.2001ஆம் நாள் பிஜிபி கல்யாண மண்டபத்தில் நடை பெற்ற நிகழ்ச்சியில், தமிழை ஒரு பாடமாகப் பயிலும் தொடக்க நிலை மாணவர்கள் 40 பேருக்கும், உயர்நிலை மாணவர்கள் 15 பேருக்கும் கல்வி உதவி நிதியினை, சிண்டாவின் தலைமை நிர்வாகி திரு. விவேகானந்தன் அவர்கள் பேரவையின் சார்பில் வழங்கினார். தொடக்கநிலை மாணவர்களுக்கு 150 வெள்ளியும் உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு 200 வெள்ளியும் உதவி நிதியாக வழங்கப்பட்டது. ஆண்டுதோறும் செயல் படுத்தப்படவுள்ள இத்திட்டத்தின் மூலம், குறைந்த வருவாய் குடும்பங்களில் உள்ள குழந்தைகள் அடிப்படைக் கல்வி பெற உதவுவதே பேரவையின் நோக்கம். தேவையேற்படின், அடுத்தடுத்த ஆண்டுகளில் மேலும் பல மாணவர்களுக்குக் கல்வி உதவி நிதி வழங்க முயற்சிக்கப்படும்.

சிங்கைச் சுடர்

தமிழர் பேரவையின் குறிக்கோள்களில் ஒன்று, தமிழுக்கும், தமிழருக்கும், நம் நாட்டிற்கும் பெருமை சேர்க்க தமிழ் மாத இதழ் ஒன்றினை வெளியிடுவது. 50 ஆம் ஆண்டின் நிறைவினைக் காணும், இவ்வாண்டில், பேரவையின் நீண்ட நாள் கனவு நனவாகியுள்ளது. 18.1.2001ம் நாள் புதன்கிழமை இரவு 7 மணிக்கு பிஜிபி கல்யாண மண்டபத்தில் 'சிங்கைச் சுடர்' என்னும் மாத இதழ், சிண்டாவின் தலைமை நிர்வாகி திரு. விவேகானந்தன் அவர்களால் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டது. 400 பேர் அரங்கம் நிறைய கலந்து கொண்ட இந்நிகழ்ச்சியில், சிங்கப்பூர் கொள்கை ஆய்வுக் கழகத்தின் துணை இயக்குனர் திரு அருண்மகிழ்நன் அவர்கள் இதழ் குறித்த மதிப்புரை வழங்கினார், வசந்தம் சென்ட்ரலின் தலைவர் திரு. த. ராஜசேகரன் அவர்கள் வாழ்த்துரைக் கூறினார். பல்வேறுபட்ட அம்சங்களை உள்ளடக்கி எளிமைத் தமிழில், குறைந்த விலையில் வெளிவிடப்படும் 'சிங்கைச் சுடர்' சிறுவர்களும் மூத்தோர்களும் நிச்சயம் படிக்கவேண்டிய தமிழ் மாத இதழ். இதழின் ஆசிரியர் திரு. பிச்சினிக்காடு இளங்கோ அனைவரும் இந்த இதழை வாங்கி ஆதரவு தந்து பயன்பெற அழைக்கிறார்.

கல்வி உதவிநிதியினை
திரு. விவேகானந்தனிடமிருந்து பெறுகிறார் மாணவர்.



கல்வி உதவிநிதி வழங்குதல்; சிங்கைச்சுடர் வெளியீட்டு நிகழ்ச்சியில் பங்கேற்ற பிரமுகர்கள்
திரு. பிச்சினிக்காடு இளங்கோ, திரு. அருள்மகிழ்நன், டாக்டர். ஆர். தேவேந்திரன்,
திரு. விவேகானந்தன், திரு. மோகனரூபன், திரு ராஜசேகரன், திரு பி. பி. காந்தம்



TWO MORE PROJECTS ARE LAUNCHED

BURSARY AWARD

For the first time, Tamils Representative Council has given out $9000 as Bursary awards to 55 Indian Children. The award recipients are selected from the 360 application received from the low income families and one of the condition is that they must be learning Tamil as one of the subjects. Mr Vivekanandan, Chief Executive Officer of SINDA gave away the awards of $150 each to 40 students studying at Primary Schools and $200 each to 15 students studying at Secondary Schools. TRC Management Committee strongly feels that the bursary will help the low income families to fund their children's education. In view of the large number of applications received this year, TRC is also looking into the possibility of increasing the number of awards to be given out in the coming years.



அரங்கம் நிறைந்த ஆதரவாளர்கள் - 400 பேர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு விழாவினைச் சிறப்பித்தனர்

SINGAI SUDAR

One of the objectives of the TRC is to release periodical magazine(s) to promote Tamil and Tamil cultural. This long due dream is realised this year while TRC is in the mood of celebrating its 50th Anniversary. The monthly magazine titled SINGAI SUDAR was officially released by Mr Vivekanandan, CEO of SINDA on Wednesday 18 April 2001 at PGP Kalyanamandapam. The event participated by more than 300 people where Mr Arulmahizhnan, Dy Director, Policy studies provided appraisal of the magazine. Mr T Rajasegaran, Head, Vasantham Central provided the congratulatory message. The Guest-of-Honour, Mr Vivekanandan and Mr P P Kantham, Vice-President presented the magazine to well wishers and sponsors. The editor, Mr Pichnikadu Elango thanked all and invited every one to feel free to communicate with him on suggestions and improvements if any can be implemented to improve the quality and to increase the readership. TRC requests every Tamils in Singapore to subscribe to SINGAI SUDAR which will be beneficial to our children and to the community as a whole.

GOOD WISHES & BLESSINGS FOR NEWLY WED COUPLES

It was wedding bells for Tamil Representative Council Treasurer, Thiru I. Khader Sultan's son on Saturday 17.03.2001.

Our President Dr. R. Theyvendran's only son Mr T. Rameson tied the knot on 19.05.2001

Tamil Representative Council Vice President, Thiru A. R. Masood's daughter's marriage was held on Sunday 20.05.2001.

புதுமணத் தம்பதிகள் நல்வாழ்வு வாழ வாழ்த்துகிறோம்

தமிழர் பேரவையின் பொருளாளர் திரு. காதர் சுல்தான் அவர்களின் புதல்வரது திருமணம் கடந்த 17-3-2001 ஆம் நாள் சிறப்பாக நடந்தேறியது.

தமிழர் பேரவையின் தலைவர் டாக்டர் ஆர் தேவேந்திரன் அவர்களின் புதல்வன் திரு ரமேஷினின் திருமணம் 19-5-2001 ஆம் நாள் சிறப்பாக நடந்தேறியது

தமிழர் பேரவையின் துணைத் தலைவர் திரு. மு. அ. மசூது அவர்களின் புதல்வியின் திருமணம் 20-5-2001 ஆம் நாள் சிறப்பாக நடந்தேறியது.

இந்தியர் கலாச்சார கேளிக்கை விழா 2001

INDIAN CULTURAL CARNIVAL 2001



பாரம்பரிய விழாவில்
கலந்துகொள்ள வருகிறார்
துணைப் பிரதமர் லீ சியான் லுங்

மக்கள் கழக இந்தியர் நற்பணிக்குழு ஒருங்கிணைப்புப் பேரவை, முதன்முறையாக இந்தியர் கலாசார கேளிக்கை விழாவினை கடந்த 31.3.2001ம் நாள் சனிக்கிழமை நீ ஆன் சிட்டி' வளாகத்தில் நடத்தியது. இவ்விழாவில், தமிழர் பேரவையின் தலைமையில், சிங்கப்பூர் தமிழர் சங்கமும், இலங்கைத் தமிழர் சங்கமும் இணைந்து தமிழர் பண்பாடு கலாசாரக் கண்காட்சிக் கூடாரம்; தமிழர் உணவு விற்பனைக் கூடாரம்; தமிழர் கலைப் பொருட்கள் விற்பனைக் கூடாரம் ஆகியவற்றை அமைத்து ஆதரவு தந்தது. பாரம்பரிய கலைகளான கைரேகை சோதிடம்; கிளி சோதிடம்; காது குத்துதல்; மருதாணி இடுதல் போன்றவைகளும் இடம்பெற்றன. தமிழர் பேரவையின் சார்பில் மணிமாறன் நடனக்குழுவினர், பரத நாட்டியம்; கரகாட்டம்; கோலாட்டம்; மயிலாட்டம் போன்ற பாரம்பரிய நடனங்களை மேடையிலும் சிறப்பு விருந்தினரை வரவேற்கும் போதும் ஆடி மகிழ்வித்துப் பெருமை சேர்த்தனர். பாரம்பரிய கண்காட்சியில் வைக்கப்



For the first time, Ngee Ann City Civic Plaza turned into a Little India on Saturday 31 Mar 2001. Despite the occasional downpour thousands of people dressed in various colourful sarees/kurtas- as well as other non-Indians gathered at the busy Orchard Road to see, touch and feel some of the ancient cultural/traditional items displayed as part of the Indian Cultural Carnival cum Exhibition organised by the Peoples Association IAEC CC.

Tamils Representative Council together with the Ceylon Tamils Association and the Singapore Tamilian Association participated in the colourful carnival.



தமிழர் பாரம்பரிய கண்காட்சிப் பொருட்களைப் பார்வையிடுகிறார்
துணைப் பிரதமர் பிரிகேடியர் ஜெனரல் லீ சியான் லுங்

At the Tamils exhibition, TRC group displayed various traditional and cultural items like Musical Instruments, Household items - kitchen items, prayer items etc.



மணிமாறன் நடனக்குழுவினரின்
மயிலாட்டம், கரகாட்டம், கோலாட்டம்
நடனங்கள்

Photographs, Books, Tamil Software, Plants, Games items, etc accompanied with brief write-up descriptions on usage of these items. Visitors including the invited guests like MPs, Government Officials, Grassroots leaders remarked that the exhibition was very



இதுதான் எங்கள் பண்பாடு என்று சுட்டிக்காட்டுகிறார் செயலாளர் திரு பாண்டியன்

பட்டிருந்த இசைக்கருவிகள்; நூல்கள், ஓலைச் சுவடிகள்; இல்லத்திற்குத் தேவையான பொருட்கள்; சமையல் பாத்திரங்கள்; ஆபரணங்கள் ஆடைகள் மற்ற அனைத்துப் பொருட்களும் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் அனைவரையும் கவர்ந்திருந்தது மட்டுமல்ல நம் பண்பாட்டையும் கலாசாரத்தையும் தெரிந்து கொள்ள பெரிதும் உதவியுள்ளன என்பதில் சிறிதும் ஐயமில்லை.

தமிழர் பண்பாட்டை எடுத்தியம்ப, பாரம் பரியப் பொருட்கள் தந்துதவிய ஜோதி புஷ்பக் கடை, GGS புத்தகக் கடை, EVS புத்தகக் கடை; ராபிள்ஸ் பெண்கள் உயர் நிலைப்பள்ளி, கணேஷ் டெக்ஸ்டைல்ஸ் திரு SA முத்தையா, திரு. தர்மராஜ், Dr. R. தேவேந்திரன், PBM திரு பாண்டியன் மற்றும் பலவகைகளில் ஆதரவு தந்த அனைவருக்கும் எங்களின் நன்றி.



துணைப்பிரதமருக்கு நினைவுப் பரிசாக 'திருக்குறள்' வழங்குகிறார் தலைவர்
Presentation of a Souvenir Thirukural to D.P.M. Lee Hsian Loong

informative, easy to understand and attractive.

Ancient art of Barathanatiyam and folk dances like Karagattam, Mayilattam, Kolattam and Kavadiattam were also presented on stage by the 15 member team from Manimaran Dance Troupe. The 15 minute-show by the performers dressed in colorful costumes thrilled the crowd.

In addition to the exhibition, TRC also organised Henna drawing, Parrot astrology, Palm Reading and ear piercing services at the sales and activity segment. These events attracted many non-Indians and tourists. Many non-Indians were excited and eager to own the colourful peacock feathers.



சுற்றுப்பயணிகளையும் கவர்ந்தது இந்தக் கண்காட்சி



பாரம்பரிய கலைகள் மருதாணி இடுதலும், கிளி சோதிடம் பார்த்தலும்



Sale of books, Tamil software, ornaments etc were also carried out at the sales counter. Tamil scrabble, Encyclopedia, Software and educational posters were on popular demand. At the food segment, traditional vegetarian food prepared in Tamil Nadu style, also received good support.

The Guest-of-Honour, BG Lee Hsien Loong, 1st Deputy Prime Minister, visited the Tamils exhibition stall at about 7.15 pm. He was given a colourful Tamil folk dance performance followed by Arathi. Dr R Theyvendran PBM, President TRC received him and presented a souvenir - Thirukural packed in a maroon coloured gift box.

உங்களால் உதவ முடியும்

சிங்கையின் பல குடியிருப்புப் பேட்டைகளில் பாலர் பள்ளிகளிலும், தொடக்கநிலைப் பள்ளிகளிலும் பயிலும் மாணவர்கள் தமிழில் பேசி உரையாடவும் படிக்கவும் நட்பு முறையில் ஊக்குவிப்புப் பயிற்சி வழங்கப் பகுதி நேரத் *தொண்டூழியர்கள் தேவை!*

வாரம் 2 மணி நேரம் போதுமானது. உங்கள் இல்லத்தின் அருகிலேயே வசிக்கும் தமிழ் மாணவர்களுக்கு உதவ முன் வாருங்கள். மேல் விபரங்களுக்கு: ✆ 3366316.

கந்தசாமி அறநிதி

தமிழ் மக்களின் நலனுக்கு உதவ உருவாக்கப்பட்ட நிதி. சக சமூகத்தினரின் வாழ்வில் நாமும் நம் பங்கைச் செலுத்திப் பெருமைப்படுவோம். உங்களாலியன்ற அளவு நன்கொடை தந்துதவ முன்வாருங்கள். *சிறுதுளிப் பெரு வெள்ளம்.* தொடர்பு கொள்ளுங்கள்: நிர்வாகச் செயலாளர் ✆ 3366316

தொண்டூழியர்களுக்கு மாபெரும் தேநீர் விருந்து

தொண்டூழியர்களுக்கு நன்றி தெரிவிக்க மாபெரும் தேநீர்விருந்து நிகழ்ச்சிக்கு சிங்கப்பூர் இந்தியர் மேம்பாட்டுச் சங்கம், கடந்த 22-2-2001 ஆம் நாள் 'சன்டெக் சிட்டியில்' ஏற்பாடு செய்திருந்தது. இந் நிகழ்ச்சியில், நம் பிரதமர் திரு. கோ சோக் தொங் அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றி கௌரவித்தார். பேரவை யின் தலைவர், டாக்டர் ஆர் தேவேந்திரன், துணைத்தலைவர் திரு மோகனரூபன் மற்றும் நிர்வாக உறுப்பினர்களுடன் இணை அமைப்பு களின் தலைவர்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். நீண்டநாள் தொண்டூழியம் புரிந்தவர்களுக்குச் சான்றிதழ் வழங்கி கௌரவித்தார் பிரதமர் கோ அவர்கள்.



பிரதமருடன் சட்ட வெளியுறவு அமைச்சர் திரு. ஜெயகுமார், முன்னாள் அமைச்சர் திரு தனபாலன் சிண்டாவின் தலைமை நிர்வாகி மற்றும் பலர்



உற்சாகத்துடன் நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வருகிறார் நம் பிரதமர்.

VOLUNTEERS TEA 2001

SINDA arranged a grand **Volunteers Tea 2001** get-together at SUNTEC City on 22.2.2001 for all volunteers. The Guest-of-Honour for the evening was the Prime Minister, Mr. Goh Chok Tong.

Led by TRC President Dr. R. Theyvendran and TRC Deputy Chairman Mr. S. Moganaruban all TRC-affiliate organisations were invited to and participated in the national event. Later PM Goh gave away Certificates of Appreciation to the dedicated volunteers.

6 வது தமிழ் முகாம்- 2001 6TH TAMIL LANGUAGE CAMP 2001

30 உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ் பயிலும் மாணவர்கள் கலந்துகொண்ட 6 வது தமிழ் முகாமிற்கு செயிண்ட் ஆன்ட்ரூஸ் உயர்நிலைப்பள்ளி ஏற்பாடு செய்திருந்தது. 24-3-2001ம் நாள் நடைபெற்ற இந்த முகாமில் மாணவர்கள் தங்களின் செயலாக்கத்திறனையும், ஆற்றலையும் பல போட்டிகளில் பங்கேற்பதன் மூலம் காட்டினார். வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசும் வழங்கப் பட்டது. நிகழ்ச்சியின் ஆதரவாளர்களில் ஒருவராக 'தமிழர் பேரவையும்' பங்கேற்றதில் மகிழ்ச்சி.

செம்பவாங் குழுத்தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு க சண்முகம் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு பரிசுகளையும், அன்பளிப்புகளையும் வழங்கினார்.



சிறப்பு விருந்தினரிடமிருந்து நிகழ்ச்சி ஆதரவாளருக்கான அன்பளிப்பை பெறுகிறார், தமிழர் பேரவை தலைவர் டாக்டர் ஆர் தேவேந்திரன்.



பள்ளி முதல்வருடனும் தமிழ் ஆசிரியருடனும் தமிழர் பேரவை தலைவர் மற்றும் திரு சந்துரு உரையாடுகின்றனர்

Tamil students from 30 secondary schools participated in the above which was organised on 24 March 2001 by the Anglo-Chinese School. The camp provided opportunity to the students to show their talent and commanding usage of Tamil through various competitions. TRC is proud to be one of the sponsors of this event.

தமிழர் திருநாள் THAMIZHAR THIRUNAAL

இவ்வாண்டின் தமிழர் திருநாள் நிகழ்ச்சியினை கடந்த 13-1-2001 ம் நாள் உலக வர்த்தக மைய அரங்கில் டாக்டர் சுப. தின்னப்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஐக்கிய இந்திய முஸ்லீம்கள் சங்கம் முன்னின்று ஏற்பாடு செய்த இந்நிகழ்ச்சிக்கு ஜாலான் புசார் குழுத்தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் யாக்கோப் இப்ராஹிம் மற்றும் டத்தின் ஸ்ரீ இந்திராணி சாமிவேலுவும் கலந்து கொண்டனர். டாக்டர் அரங்க ராமலிங்கம், டாக்டர் அக்னிபுத்திரன் ஆகியோர் சிறப்புரைகள் நிகழ்த்தினர்.



தமிழர் திருநாள் நிகழ்ச்சியில் சிறப்புரையாற்றிவர்கள் தொண்டுழிய விருது பெற்றவர்கள்.

தமிழ்ச் சமுதாயத்திற்கு அயராது பணியாற்றிய 15பேர் அன்றையதினம் கௌரவிக்கப்பட்டனர். இவர்களுக்கு நன்றி தெரிவித்துப் பாராட்டு வழங்கப்பட்டதோடு பொன்னாடையும் போர்த்தப்பட்டது. ***வரும் ஆண்டுகளில் தமிழர் திருநாள் விழாவினைத் தமிழர் பேரவை பொறுப் பேற்று நடத்த வேண்டும்*** என ஐக்கிய இந்திய முஸ்லீம் சங்கம் கூறியதாக, திரு அமலதாசன் (துணைத்தலைவர் கலாச்சாரக் குழு) பேரவை மேலாண்மைக் குழுவிடம் தெரிவித்துள்ளார்.

This year's Thamizhar Thirunaal was organised by the United Indian Muslim League on 13.1.2001 at the World Trade Center at 7 p.m. Dr. Su Pa Thinnappan presided over the colourful function.

Dr. Yaacob Ibrahim, Member of Parliament for Jalan Besar GRC was the Guest-of-Honour. Datin Sri Indrani Samy Vellu was also present at the function. Dr. Aranga Ramalingam and Dr Agni Puthran were the Guest Speakers from Tamil Nadu.

Altogether, 15 recipients were recognized and commended for their devotion and contributions towards the Tamil community. They were thanked, garlanded and presented with momentos by Dr. S P Thinnappan & Datin Sri Indrani Samy Vellu. TRC Management Committee was informed by Thiru Amallathasan that the United Indian Muslim League feels that in future years TRC should take the lead in organising and celebrating the Thamizhar Thirunaal event.

From Trc, Vice-President Malar Manickam, Amallathasan, Assistant Secretary for Education, Mr. C. A. Muthiah, Management Committee Member S. Thangavelu and women's wing Vice President, Mrs Indra Krishnan were among the recipients.

ஆரோக்கிய வாழ்வே நம் சொத்து HEALTH IS WEALTH

ஆரோக்கிய வாழ்வுக்கு ஆயுர்வேதம்.

தமிழ்நாட்டில் கோயம்புத்தூரைச் சேர்ந்த டாக்டர் *R.* சுப்ரமணியன் அவர்களின் சுவையான விரிவுரை, கடந்த 10-3-2001 ஆம் நாள் சிராங்கூன் வடக்கில் அமைந்துள்ள ***அருள்மிகு முனீஸ்வரன் ஆலயத்தில்*** நடைபெற்றது.

ஆலயத் தலைவர் திரு. காளிமுத்து தலைமை தாங்கிய இந்நிகழ்ச்சிக்கு திரு. பிச்சினிக்காடு இளங்கோ வரவேற்புரை நிகழ்த்தினார். டாக்டர் சுப்ரமணியம் தன் உரையில், "பலவிதமான நோய்களுக்கான நிவர்த்திப்பொருட்களை இயற்கை அன்னை தன்னுள் வைத்துள்ளாள்," உடல்வழி நோய்களில் முதன்மையாக உள்ளது மலச்சிக்கல் என்றும் அதற்கான நிவர்த்தியையும் தெரிவித்தார்.

NATUREPATHY IS THE WAY TO A HEALTHY LIFE

Dr. R. Subramaniam from Coimba-tore, Tamil Nadu gave a brief and interesting lecture on the natural way to health and a healthy lifestyle at Dharmamuniswarar Temple, Serangoon North Avenue 1, on 10.3.2001.

Mr. Kalimuthu, President of the temple presided over the function while the Assistant Secretary for Publication for TRC, Mr. Pichinikkadu Elango welcomed the gathering.

Dr. R. Subramaniam emphasised that many of the remedies for good health are found in nature. He said that constipation is the mother of many bodily ailments and recommended an easy water method to get rid of constipation.



தங்கமுலாம் 'திருக்குறள் நூல் வெளியீடு LAUNCHING OF TIRUKKURAL BOOK

தமிழர் பேரவையின் ஏற்பாட்டில், திரு அழகப்பா ராம்மோகன் அவர்கள் தொகுத்துள்ள 'திருக்குறள்' நூல், 4-2-2001 ஆம் நாள் சிங்கப்பூரில் அறிமுகம் செய்யப்பட்டது. உமறுப் புலவர் தமிழ்மொழி நிலையத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் தமிழ் ஆர்வலர்கள் பலர் கலந்து கொண்டு திருக்குறள் நூல் வாங்கி ஆதரவு தந்தனர்.



திரு அழகப்பா ராம் மோகனுக்குப் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கிறார் டாக்டர் ஆர் தேவேந்திரன்

நிகழ்ச்சிக்கு டாக்டர் சுப. திண்ணப்பன் தலைமை தாங்கி அறிமுகம் செய்தார். டாக்டர் ஞான சூரியன் வாழ்த்துரை நிகழ்த்தினார், டாக்டர் ஆர் தேவேந்திரன், PBM நூலாசிரியருக்குப் பொன்னாடைப் போர்த்தி வாழ்த்தினார். திரு. S. மோகன-ரூபன், PBM ஆசிரியருக்கும் மற்றவர் களுக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார். இதேநாளில் 'இன்பத்துப்பால்' இசைத் தட்டும் அறிமுகம் செய்யப்பட்டது.



நூல் அறிமுக நிகழ்ச்சியில், டாக்டர் ஞான சூரியன் டாக்டர் சுப. திண்ணப்பன், திரு அழகப்பா ராம் மோகன், டாக்டர் ஆர் தேவேந்திரன், திரு மோகனரூபன் ஆகியோர்

TRC arranged the launching of the Holy Script of Tirukkural and the compact disc of Inbathupal in Singapore on Sunday, 4-2-2001. The Tirukkural book was compiled by Alagappa Ram Mohan.

Assistant Secretary for Publications, M. A. Elango welcomed the gathering while Dr. S.P. Thinnappan presided over the function. TRC President Dr. R. Theyvendran, PBM shawled and garlanded Alagappa Ram Mohan and Deputy President S. Moganaruban, PBM spoke about the importance of Tirukkural and insisted that everyone should possess a copy of this worthy treasure-trove of Tamil language and Culture.

Dr. D. Gnanasundaram gave a lucid talk on Tirukurral which won and captivated the attention of all those present.

Finally, Thiru Alagappa Ram Mohan, who has just returned from America, explained that the challenge facing the Tamils here was to forge a common identity.

He said that as a result of his studies and interaction with others, he had gained much and that has led him to compile and produce this sacred book.

Many of the participants bought the book, which was personally signed by him. The discussion ended at about 6.30pm with appreciation extended to the participants for their lively contributions.

புதிய உறுப்பினர்களை வரவேற்கிறோம் WELCOME OUR NEW MEMBERS

ஆயுள் உறுப்பினர்கள்

திரு M K ராமச்சந்திரன்
திரு R கிருஷ்ணா
குமாரி T யுவராணி
டாக்டர் சிவ சங்கரன்
டாக்டர் சித்ரா சிவ சங்கரன்
திருமதி ரஞ்சனி மோகனரூபன்
திரு E V சிங்கன்
திரு M K சின்னையா
திரு V செங்கோடன்

இணை அமைப்பு

உமறுப்புலவர் தமிழ் உயர்நிலைப்பள்ளி முன்னாள் மாணவர் சங்கம்

ஜைரோ நன்கொடையாளர்கள்

திரு சுந்தரம்
திருமதி மலர்விழி
திருமதி சாந்தா
திரு S ராசமாணிக்கம்
திரு M மதியழகன்

Life Members

Mr M K. Ramachandran
Mr R Krishna
Miss T Uvarani
Dr Siva Sankaran
Dr Chitra Siva Sankaran
Mdm Rajini Moganaruban
Mr E V Singhan
Mr MK Sinniah
Mr V Sengodan

Affiliate Organisations

Umar Pulavar Tamil High School Old Students Association.

Giro Contributors

Mr Sundram
Mdm Malarvizhi
Mdm Santha
Mrs Rasamanickam
Mr M Mathialagan

சாதாரண உறுப்பினர்கள்

திருமதி சித்ரா ராமேஷ்
திரு ராமா ராஜா
திரு குமணன் அம்பிகாபதி
திருமதி பிரசன்னவதனி
திரு துரைமாணிக்கம்
திரு சுப்பிரமணியம் சுப. அருணாசலம்
குமாரி ரெஜீனா பேகம்
திரு வெங்கட்
திரு P திருவேங்கடம்
திரு அப்துல் ரஹிம் பின் அப்துல் கரிம்
திரு M மதியழகன்

ORDINARY MEMBERS

Mrs Chitra Ramesh
Mr Ramah Raja
Mr Kumanan Ambikapathy
Mrs Prasannavadhani
Mr Thuraimanickam
Mr Subramaniam Suba Arunachalam
Miss Regena Begum
Mr Vengkat
Mr P Thiruvengadam
Abdul Rahim Bin Abdul Karim
Mr M Madialagan

சிங்கபூர் இந்து சபை நடத்திய 18 வது வள்ளலார் விழா

இணை அமைப்புகளில் ஒன்றான, *சிங்கப்பூர் இந்து சபை* 18 ம் ஆண்டாக வள்ளலார் விழாவினைக் கடந்த 24-3-2001 ஆம் நாள் P.G.P கல்யாண மண்டபத்தின் கீழ்த்தளத்தில் நடத்தியது. இராமலிங்க சுவாமிகளுக்குக் குரு பூஜை நடத்திய பின்னர், தேவாரப் பாடல்களைச் சிவக்குமாரின் திருமுறை மாணவர்கள் பாடினார்கள். பேராசிரியர் N. E . சண்முகம் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார். தமிழகத்திலிருந்து வருகைபுரிந்திருந்த 'இளசை சுந்தரம்' அவர்கள் "வாழ்விக்க வந்த வள்ளல் என்ற தலைப்பில் வள்ளலாரின் வாழ்வியல் முறைகளை எளிமையாகவும் நகைச்சுவையாகவும் சொல்லிச் சொற்பொழிவாற்றினார். 300க்கும் மேற்பட்ட இளையவர்கள், பெரியோர்கள் கலந்துகொண்ட இந்நிகழ்ச்சி நன்முறையில் நடந்தேறியது.



திரு இளசை சுந்தரம் சிறப்புரையாற்றுகிறார். அருகில் நிகழ்ச்சியின் தலைவர் டாக்டர் *N. E.* சண்முகம் அவர்கள்



வள்ளலார் விழாவில் கலந்துகொண்டு பேரன்பர்களில் ஒரு பகுதியினர்.

18TH VALLALAR VIZHA

Our affiliate member, Singapore Hindu Sabai organised the 18th Vallalar Vizha an event organised in memory of Ramalinga Swamigal - (a Tamil Poet-saint lived in 19th Century) on 24th March 2001 at PGP Kalyana mandapam. The event started with Guru Pooja followed by Thevaram songs by a group of young children. Prof N E Shanmugam presided the event. Visiting professional, Mr Elasai Sundram captivated the audience of almost 300 young and old with his humorous and jovial speech on the "Principles and meaningful life path shown by Vallalar."

ஒன்றுகூடுதலும் விருந்தும்



சங்கத்தின் தலைவர் திரு தி. ஜோதிநாதனின் வரவேற்புரை

தமிழர் பேரவையின் இணை அமைப்புகளில் ஒன்றான *உமறுப்புலவர் தமிழ் உயர்நிலைப் பள்ளி முன்னாள் மாணவர் சங்கம்,* கடந்த 29.04.01ஆம் நாள் ஞாயிறன்று "ஒன்றுகூடுதலும் விருந்தும்" என்ற நிகழ்ச்சியினை இலங்கை விளையாட்டு மன்ற மண்டபத்தில் நடத்தியது. முன்னாள் மாணவர்களும் அவர்தம் குடும்பத்தினரும் ஒன்றுகூடி, உரையாடி, நீண்டநாள் நட்பினைப் புதுப்பித்து வளர்த்துக்கொள்ளும் நோக்கத்துடன் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்ச்சியில் 90 பேர் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளனர். முன்னாள் மாணவர்களைச் சங்கத்தில் உறுப்பினராக்கி, பயனுள்ள அமைப்பாக உருவாக்கப் பாடுபடப்போவதாக, சங்கத்தின் தலைவர் திரு. தி. ஜோதிநாதன் தன் உரையில் உறுதி கூறினார்.



விருந்து நிகழ்ச்சியில் பங்கேற்ற முன்னாள் மாணவர்களில் ஒரு பகுதியினர்



திரு அப்துல் மஜித் அவர்கள் பாடல்கள் பாடி மகிழ்விக்கிறார்

இரங்கல் செய்தி

பேரவையின் தலைவர் மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள், காலஞ்சென்ற திரு K. T. சாமுவேல் அவர்களின் குடும்பத்திற்கு தங்களின் ஆழ்ந்த அனுதாபத்தையும் வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கின்றனர். காலஞ்சென்ற திரு K. T. சாமுவேல் அவர்கள் தமிழர் பேரவைக்கும், தமிழர் பேரவையின் பன்னோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வளர்ச்சிக்கும் ஆற்றிய பணிகள் மறக்கவியலாது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

Condolences

President and members of TRC Management Council express its deepest sympathy and condolences to the family of late Mr K T Samuel who passed away recently Mr K T Samuel had been a strong supporter and member of TRC for many years and his contributions to TRC and TRC Cooperative Society are remarkable.

மாணவர்களுக்கான ஊக்குவிப்பு முகாம் 2001

தமிழர் பேரவையும், பீஷான் சமூக மன்ற இந்திய நற்பணிக் குழுவும் இணைந்து, சிண்டாவின் ஆதரவுடன், தொடக்கநிலை 4, 5 மற்றும் 6-ம் வகுப்பு மாணவர்களுக்கு ஊக்குவிப்பு முகாம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்தது.

இரண்டாவது ஆண்டாக நடைப்பெற்ற இம்முகாம் மே மாதம் 26, 27 தேதிகளில், காலை 9.00 மணி முதல் மாலை 5 மணி வரை, பீஷான் சமூக மன்றத்தில் நடைப்பெற்றது.

மாணவர்களைத் தேர்விற்கு தயார் செய்து கொள்ளும் வழிகளை அறிந்துக் கொள்ளவும், காலத்தை முறையாகவும் ஆக்கப்பூர்வமாகவும், பயன்படுத்த தெரிந்துக் கொள்ளவும், இலக்குகள் அமைத்து அவற்றை அடையும் முறைகளை அறியவும் இம்முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த 2 நாள் முகாமில், மாணவர்களுக்கு, பட்டறைகள், போட்டிகள், விளையாட்டு அங்கங்கள் என பலதரப்பட்ட நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

பயிற்சி பெற்ற ஆசிரியர்களும், தேர்ச்சி பெற்ற நிபுணர்களும், இம்முகாமை வழி நடத்திட உதவினர். டாக்டர் தேவேந்திரன், திரு விஜயன் நம்பியார், டாக்டர் டேனியல் தியாகு, திருமதி பஷீர் போன்றவர்களின் உதவியுடன் முகாமில் கலந்துக்கொண்ட சுமார் 70 மாணவர்கள் பயன் அடைந்தனர்.

பங்குபெற்ற அனைத்து மாணவர்களுக்கும், பரிசுகள், நினைவுப் பொருட்கள் மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது.

சிற்றுண்டியும், மதிய உணவும் வழங்கிய, ஆனந்த பவன் உணவகம், காயத்ரி உணவகம் மற்றும் நன்கொடை வழங்கிய ஸ்டாம்ஃபோர்ட் பிரஸ், மோடர்ன் மொண்டிசாரி நிறுவனம் ஆகியவர்களுக்கு, ஏற்பாட்டுக்குழு நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

பங்குப் பெற்ற மாணவர்களின் கருத்துக்களை ஆராய்ந்த பின், இம்முகாம் அவர்களுக்கு மிகவும் பயனளித்து உள்ளது எனவும், தேர்விலும் வாழ்விலும் சிறந்து விளங்க பல அரிய வழிமுறைகளை கற்றுக்கொண்டதாகவும் தெரிகிறது.



தமிழர் பேரவை தலைவர், "வெற்றிக்கு வழிகள்" எனும் தலைப்பிலான பட்டறையை நடத்துகிறார்.



டாக்டர் தியாகு, "நினைவாற்றல் திறனை வளர்த்தல்"



"always believe the best is yet to be..."

MOTIVATIONAL CAMP 2001



Dr. R. Theyvendran motivating the students to strive - to be the best.



Participants listening attentively.



Team - building games.



Certificate presentation.

Tamils Representative Council jointly with Bishan Community Club Indian Activities Executive Committee and SINDA organised a Motivation Camp for Primary 4, 5 and 6 Indian students. The camp was held from 26.5.2001 to 27.5.2001 (Saturday and Sunday). It was held at Bishan Community Club from 9.00 am to 5.00 p.m. on both days.

The objective of the camp was to help students in preparing for their examinations, teach them methods on managing time and setting goals and assisting them in developing their minds.

The camp covered the following areas:

- Improving Memory Skills
- Enhancing Creative Thinking
- Setting and Achieving Goals
- Importance of Education and Examinations
- Team Building & Confidence Development



Total attention was given by the students...

Workshops, Challenging Activities on Team Building and Character Building, Competitions and Physical Workouts constituted as part of the 2-day event. In addition to these, hands-on programs were also organised to develop teamwork and character building.

The programs were conducted by trained professionals and those from the educational field like Mr Vijayan Nambiar, Dr R Theyvendran, Dr Daniel Theyagu and Mrs Abdul Basheer. About 70 students participated in the programme. All participants were presented with certificates and souvenirs. Attractive prizes were also presented to all winners.

Anandha Bhavan Restaurant and Gayathri Restaurant supported the Camp by generously sponsoring refreshments and lunch for both days. The organising committee also thanks Stamford Press Pte Ltd and Modern Montessori International for sponsoring the Camp.

Feedback received from the students showed that the Camp was very beneficial to them. It had improved their way of thinking and solving problems, built confidence and developed teamwork. They also left with strong ideas on how better to inter-relate with their fellow students. The workshop on Preparing for Examinations had also given them insights on improving their examination results.



Individual attention to some...

கல்வி உதவித் திட்டம் 2001 EDUCATIONAL ASSISTANCE PROGRAMME 2001

இந்திய மாணவர்களின் கல்வித் திறனை மேம்படுத்துவதற்காகத் தமிழர் பேரவை தேசிய அளவில் நடத்தி வந்த, 'கல்வி உதவித் திட்டம்' ஓராண்டின் இடைவெளிக்குப் பிறகு, மறு சீரமைக்கப்பட்டு மீண்டும் இவ்வாண்டு செயல்படத் தொடங்கியுள்ளது. மாற்றியமைக்கப்பட்ட இத்திட்டம், இந்திய மாணவர்கள் சிறப்பாகச் செயல்படுவதை ஊக்குவிப்பதோடு, புதிய பொருளாதாரச் சூழ்நிலைகளுக்கும், 'வாழ்நாள் கல்வி' முறைகளில் தங்களைத் தயார்படுத்திக் கொள்ளவும் தூண்டுகோலாக அமையும் என நம்புகிறோம்.

கடந்த 11.2.2001 நாள் ஃஸ்டாம்போர்டு தொடக்கப் பள்ளியில் இத்திட்டத்தின் முதல் தவணை ஆரம்பமாகியது, 13.5.2001ம் நாள் முடிவுற்ற இத் திட்டத் தில் 200 மாணவர்கள் பங்கேற்றுப் பயன் பெற்றுள்ளனர். இத்திட்டம் சிறப்பாகச் செயல்படக் காரணமாக அமைந்தவர் களில், தொண்டுழிய ஆசிரியர்களும், ஃஸ்டாம்போர்டு மையத்தின் ஒருங்கி-ணைப்பாளர் குமாரி R. தமயந்தி, அவர்தம் துணை ஒருங்கிணைப்பாளர் குமாரி S. ஜானகி ஆகியோர் குறிப் பிடத்தக்கவர்கள். தொண்டுழிய ஆசிரி யர்களில் பலர் 10 ஆண்டுகளுக்கு மேலாக இத்திட்டத்தின் வழி இந்திய மாணவர்களின் கல்வி மேம்பாடு காண பாடுபட்ட அனுபவம் உள்ளவர்கள்.

கல்வி உதவித் திட்டத்தின் கட்டணங்கள் குறைவாக நிர்ணயிக்கப்பட்டதன் மூலம் மாணவர்கள் பலர் பயன் பெற ஏதுவாக அமைந்-துள்ளது. குறைந்த வருமான குடும்பங்களி-லிருந்து வரும் மாணவர்-களுக்குப் பகுதி அல்லது முழுக் கட்டண விலக்கும் தரப்படுகிறது. கல்வி உதவித் திட்டத்தில் பங்கேற்ற மாணவர்கள் அனைவரும் 2ம் தவணையிலும் பங்கேற்க விருப்பம் தெரிவித்திருப்பதுவும், பெற்றோர்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற ஆதரவான கருத்துக்களும், இத்திட்டத்தினை மற்ற இடங்களிலும் நடத்த கல்விக் குழுவிற்கு ஊக்கத்தைத் தந்துள்ளது. ஜீலை 1ம் தேதி தொடங்கப்படவுள்ள இரண்டாம் தவணைத் திட்டத்தினை யீசூன் வட்டாரத்திலும் நடத்த முயற்சிகள் செய்யப்பட்டுவருகிறது. இம்முயற்சி சாத்தியமாக அதிகமான மாணவர்கள் இத்திட்டத்தில் பங்கேற்க முன்வர வேண்டும். பெற்றோர்களின் ஆதரவோடும், தொண்டுழிய ஆசிரியர்களின் ஆதரவோடும் பலநூறு மாணவர்கள் பயனடைய இத்திட்டம் மேலும் விரிவடையும் எனத்திடமாக நம்புகிறோம்.



Voluntary Teachers



The Centre Managers - Deputy General Secretary - Ms. S. Janagi and Asst. Secretary Youth - Ms. R. Thamayanthi



Students assemble before going to their respective classes



Mr. Gunasekaran, voluntary teacher



In the first phase of the education programme, those who have done exceptionally well received prizes from the Dr. R. Theyvendran, PBM



Students being registered



Mr Jothinathan explaining the Peravai's future plans to the parents



Mr. Mashuthoo Vice President - Education, V. Pandiyan - General Secretary I. Khatar Sultan - Treasurer and the Executive Secretary discussing with the President Dr. R. Theyvendran, PBM



Parents and students show great interest in the programme...

The Tamils Representative Council has completely revamped its national programme after a period of lapse to improve the academic performance of Indian students.

Besides encouraging these students to excel, the aim now is also to prepare them for the new economy and life-long learning.

The Tuition Project 2001 commenced on 11.2.2001 and ended on 13 May 2001. It is conducted by volunteer teachers who have volunteered their services for the success and prosperity of the Indian community.

Nearly 200 students participated in the programme conducted at Stamford Primary School, 1 Victoria Lane.

The centre was managed by Ms. R. Thamayanthi as Centre Co-ordinator and Ms S. Janagi as Deputy Co-ordinator with the assistance of 16 volunteers teachers.

The success of the Tuition Program is partly due to the dedication of the volunteers - some of whom have been with the programme for more than 10 years.

The fees have been kept affordable to enable more students to benefit from the programme. However, financial assistance in the form of partial or full waiver of fees will be granted to students from lower income families. It is encouraging to note that all students are keen to register for phase two. Good feedback received from parents motivates the Education Committee to open-up another centre at Yishun area.

DETAILS OF PHASE II

from 1 Jul 2001 to 07 Oct 2001

Venue : Stamford Primary School (Victoria Lane)
Day : Sundays Time : 8.30 am 1.00 pm

STANDARD	SUBJECTS			FEES	
K1 & K2	MATHS	ENGLISH	TAMIL		$60 + 5*
PRIMARY	MATHS	ENGLISH	TAMIL	SCIENCE	$80 + 5*
SECONDARY	MATHS	ENGLISH	TAMIL	SCIENCE*	$100 + 5*

**** Registration Fees per phase***

More details & Registration Call: • Mr V Pandiyan 92106091 • Ms R Thamayanthi TRC Secretariat © 3366316

YOGA FOR ATTAINING A PEACEFUL & HARMONIOUS LIFE

அமைதிக்கும் அன்பிற்கும் யோகப்பயிற்சி

பேரவையின் இணை அமைப்புகளில் ஒன்றான எளிய முறை குண்டலினி யோகா சங்கம் எளிமையான முறையில் யோகப்பயிற்சி பெற விரும்புவோருக்கென சிறப்புப் பயிற்சியினை உருவாக்கியுள்ளது. இப்பயிற்சி 14 வயதிற்கு மேற்பட்ட அனைத்துப் பிரிவினருக்கும் உகந்தது.

பயிற்சியில் பங்கேற்போர் உடல் நலத்தையும் உள்மன நிம்மதியைப் பெறுவதற்கான வழிமுறைகளையும் கற்றுக் கொள்வர் மனஉளைச்சல், கோபம், கவலைகளைக் கட்டுப்படுத்தவும் கடந்தகால கர்மங்களைப் போக்கி, தெய்வீக நிலை அடையவும் இப்பயிற்சிகள் உதவும்.

புதிய பயிற்சி வகுப்புகள் கீழ்க்கண்டவாறு நடைபெறும்

இலங்கை விளையாட்டுச் சங்கம் 101 பாலஸ்டியர் சாலை	திங்கட்கிழமை இரவு 7-9 மணி
புனிதமரம் பாலசுப்ரமணியர் ஆலயம் ஈசூன் தொழிற்பேட்டை, ஈசூன் அவின்யு 7	புதன்கிழமை இரவு 7-9 மணி
அருள்மிகு தர்ம முனீஸ்வரன் ஆலயம் சிராங்கூன் வடக்கு அவின்யு 1	வியாழக்கிழமை இரவு 7-9 மணி
அருள்மிகு ருத்ர காளியம்மன் ஆலயம் 100 டெப்போ சாலை	சனிக்கிழமை இரவு 7-9 மணி

The **Simplified Kundalini Yoga Society,** an affiliate organisation of TRC has come up with a safe yoga practice for all those interested.

Attendees will be taught as how to attain overall good health and inner peace. They will undergo simple exercises that will help reduce stress, control anger and eradicate worries. Guidance will also be provided as how to reduce past karma and attain higher spirituality.

For further details please contact the following members:

Mr. P. Krishnamurthy 9401 1923 (Pager)
Mr. J. P. Shanmugam 9512 5259 (Pager)
Mr. S. Tharmaraj 9211 6501 (Pager)
Mr. R. Ragupathy 9520 9047 (Pager)

For all those interested, the society also has a website: www.skysociety.org.sg

Calling all Tamil Youths!

Tamil youths below the age of 35 are invited to join TRC's youth wing. Year 2001 will be an exciting year for youths as we have lined up many adventurous, joyful, local and overseas activities. For more details and registration call TRC Secretariat at 3366316.

தமிழ் இளையர்களே, வாருங்கள்!

35 வயதிற்குட்பட்ட தமிழ் இளையர்கள் தமிழர் பேரவையின் இளையர் பகுதியில் உறுப்பிரனாகச் சேர அழைக்கிறோம். இளையர்களுக்குக் கவர்ச்சிமிகு உள்ளூரிலும், வெளியூரிலும் நடத்தக் கூடிய பல வீர தீர மற்றும் மகிழ்ச்சியூட்டும் நடவடிக்கைகளும், ஏற்பாடு செய்யப்படவுள்ளது மேல்விபரங்களுக்கும், உறுப்பினர் விண்ணப்பத்திற்கும் தொடர்பு கொள்ளுங்கள், தொலைபேசி எண்: 3366316.

Win a return air ticket to Chennai ✈ சென்னை சென்றுவர விமான டிக்கெட்

Yes! For every Life Member or Giro Membership contributors with a minimum contribution of S$5 during the membership campaign (from now till Aug 2001) will be entitled to a lucky draw coupon which will have a chance to win a single return air ticket to Chennai. To increase the chances of your winning, convince your family members, relatives and friends to join TRC — the apex organisation for Tamils. For more details call TRC Secretariat at 3366316. NOW.

TRC Membership Campaign commenced on 9 Sep 2000 and will continue till 31 August 2001.

ஆம். பேரவையில் உறுப்பினர் சேர்க்கும் இயக்கத்தை முன்னிட்டு நடத்தப்படும் அதிஷ்டக் குலுக்கு மூலம் நீங்கள் சென்னை சென்றுவர விமான டிக்கெட் பெறும் வாய்ப்பு! நீங்கள் முன்மொழிந்து ஏற்றுக் கொள்ளப்படும் ஒவ்வொரு ஆயுள் உறுப்பினருக்காகவும், அல்லது $5 மாதாந்திர நன்கொடை செலுத்தும் ஜைரோ உறுப்பனருக்காவும் ஒரு அதிஷ்டக் குலுக்குச் சீட்டு தரப்படும் நீங்கள் வெற்றி பெறும் வாய்ப்பை பன்மடங்காக்கிக் கொள்ள, உங்கள் குடும்பத்தினரையும் உறவினர்களையும் நண்பர்களையும் பேரவையில் இன்றே உறுப்பினராக்குங்கள். சென்னை சென்று வாருங்கள்! உறுப்பினர் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கக் கடைசி நாள் 31.8.2001. உறுப்பினர் சேர்க்கைக் குறித்த விபரங்களுக்கும் அதிஷ்டக்குலுக்கு பற்றிய விபரங்களுக்கும் நிர்வாகச் செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

✆ 3366316 • தமிழரின் குரலாம், தமிழர் பேரவையின் ஓர் அங்கமாகத் திகழுவதில் பெருமை கொள்வோம்.

Typeset & Printed at Stamford Press